திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, காலரா பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிற நேரத்தில் மன்னார்குடியில் ஒரு சுகாதார அதிகாரி ஞாயிற்றுக்கிழமை, தான் பணிக்கு வர முடியாது என்று சொன்னதாகச் செய்திகள் கேள்விப்படு கிறோம். அப்படிப்பட்ட மக்கள் நலனைப் புறக்கணிக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, யார் தங்களுடைய பணியிலிருந்து தவறினாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

**(அ) வெள்ளக்கிணறில் உள்ள கொங்கு நாடு கலை, அறிவியல், கல்லூரி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாதிப்பு.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி மற்றும் யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை வட்டம், வெள்ளக்கிணறு பேரூராட்சிக்கு உட்பட்ட கொங்கு நாடு கலை, அறிவியல் கல்லூரியை 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 ஆம் நாள் முதல் நிர்வாகம் மூடிவிட்டதால், மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது :

### அறிக்கை.

கல்லூரிகளில் ஏற்படும் மாணவர் பிரச்சினைகளுக்கு முடிவு காண உதவி புரிய ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு மாணவர் நலக் குழு நிறுவ 1979-ல் கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு கல்லூரி முதல்வர் தலைவராவார்.

1989 பிப்ரவரி 20] [பேராசிரியர் க. அன்பழகன்]

தொடர்புள்ள மண்டலத் துணை இயக்குநர் ஓர் உறுப்பினர் ஆவார். இம்மரபுப்படி 1988-89-க்கான நலக்குழு ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் அந்தந்தத் துறைத் தலைவர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட நான்கு மாணவர்களுடன் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் அன்று அமைக்கப்பட்டது என கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் தெரிவித்துள்ளார். ஆனால் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் அன்று மாணவர் பேரவைக்குத் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மாணவர் நலக்குழு பிரதிநிதிகள் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் அன்று கூடி மாணவர் பேரவைக்குத் தேர்தல்கள் நடத்த வேண்டாமென்று முதல்வரைக் கேட்டுக் கொண்டனர். 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் மற்றும் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 ஆம் நாள் அன்று நடந்த பெற்றோர் சங்கக் கூட்டங்களில் தேர்தல்கள் வேண்டாமெனவும் கல்லூரியில் அமுலில் உள்ள பிரதிநிதிமுறை யையே தொடர்ந்து அமுல்படுத்துமாறும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கல்லூரி நிர்வாகக் குழுவும் ( College Committee 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்று கூடி மாணவர் தேர்தல்கள் வேண்டாமெனத் தீர்மானம் செய்தது ஆனால் தேர்தல்கள் வேண்டுமென மாணவர்கள் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் முதல் உண்ணா விரதமிருந்து ஊர்வலம் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரை இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு வேண்டினர். மாணவர் களைச் சமாதானப்படுத்தவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் உதவி ஆட்சியாளர் இப்பிரச்சினையில் தலையிட்டு தனது தலைமையில் நான்கு மாணவர்கள் கொண்ட ஒரு குழுவை 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்று அமைத்தார். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கோரிக்கைகளைக் கல்லூரி நிர்வாகம் ஏற்றது. மாணவர் களும் தங்களது வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றனர். ஆனால் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாள் அன்று கல்லூரி முதல்வர் மாணவர் நலக்குழு அமைக்கப்பட்டிருப்பதாக அறிக்கை வெளியிட்டார். மேலும் பெற்றோர் சங்கமும் இம்மாணவர் நலக் குழுவும் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் அன்று கூடி பிரச்சினைகளைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுக்கும் என

[பேராசிரியர் க. அன்பழகன்] [1989 பிப்ரவரி 20

வும் முதல்வர் அறிவித்தார். மேலும் வகுப்புகள் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் முதல் படிப்படியாகத் தொடங்குமெனவும் அறிவித்தார். வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்ற 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6 ஆம் நாள் அன்று கல்லூரிக்கு வந்த மாணவர்களிடையே முதல்வர் அறிவிப்பைப் பார்த்த உடனே ஒரு தட்டநிலை உருவாகியது. இதனைத் தொடர்ந்து கல்லூரி நிர்வாகம் கல்லூரியைக் காலவரையின்றி மூடி விடுதியில் உள்ள மாணவர்களையும் அறைகளைக் காலி செய்யச் சொல்லியது. இந்நிலையில் மாணவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை இப்பிரச்சினையில் தலையிட்டு கல்லூரியைத் திறக்க ஆவன செய்யுமாறு வேண்டியுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிற்குத் தெரிவித்துள்ளார். மேற்கூறிய குழுவில் கோவை மண்டல கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் கல்லூரியை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கல்லூரி முதல்வருக்கு அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையில் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் லிருந்து வகுப்புகள் படிப்படியாக 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் நாளுக்குள் திறக்கப்படும் என முதல்வர் அறிவித்தார். கல்லூரிக் கல்வி இயக்குநர் பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆகியோரும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கைகளை எடுத்தனர். இப்பேச்சுவார்த்தைகளிடையே கல்லூரி முதல்வர் சுவாமி விவேகானந்தர் மற்றும் காந்திஜியின் கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இக்கல்லூரியை அவர்களின் கொள்கைப்படி நடத்தமுடியாத சூழ்நிலையில் நிர்வாகம் கல்லூரியை அரசுக்கு சரண் செய்யக் கூடத் தயாராக உள்ளது எனக் கூறினார் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14 ஆம் நாள் அன்று துணை இயக்குநர் கல்லூரிக்குச் சென்று ஆய்வு நடத்ியதில் 1068 மாணவர்களில் 85 மாணவர்களே கல்லூரிக்கு வந்திருப்பதாகத் தெரிவித்து உள்ளார். துணை இயக்குநர் உடனடியாகக் கல்லூரிக்குச் சென்று நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்து கல்லூரியை முழு அளவில் திறக்கவும் சமூகச் சூழ்நிலையில் செயல்படவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளார். கோவை மண்டலத் துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் மாணவர்கள் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் முதல் போராட்டத்தை நிறுத்திவிட்டு படிப்படியாகக் கல்லூரிக்குத் வரத் துவங்கிவிட்டனர் என்று தற்பொழுது தெரிவித்துள்ளார்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக இரண்டு வினாக்களை எழுப்பலாம்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே கல்லூரி முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான விவரங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் உண்மைக்கு நேர்மாறானவை என்பதை நான் வருத்தத்தோடு எடுத்துச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. மாணவர்கள் கேட்டது, மாணவர் நலக்குழு அங்கே ஏற்படுத்தப்படவேண்டும் என்பது. அந்தக் கல்லூரியிலே பெருவாரியாக கழிப்பறைகளுக்குக் கட்டிடமே கிடையாது. அதற்குமாறாக மட்டையினாலே கூரை வேய்ந்திருக்கும்படியான இடங்களாக இருக்கின்றன. ஆணும், பெண்ணும், இருபாலாரும் படிக்கின்ற இடம். அங்கே ஒழுங்கான கழிப்பிட வசதி கிடையாது. அதற்காகவே அங்கே போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆசிரியர்களுடைய பெரிய போராட்டம் முன்பே நடந்திருக்கிறது அவர்களுக்கு அங்கே நியாயம் வழங்கவில்லை, மதிப்பு அளிக்கவில்லை என்று. ஏராளமான பணம் வாங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் அவர்களே, இது வினாவா, விடையா ? நான் தங்களை அனுமதித்தது வினா கேட்க மட்டுமே.

திரு. கே. ரமணி : வினா சொன்னால், வினா எழுகின்ற ஒரு அடிப்படையை பாராளுமன்றத்தில்கூட சொல்வது வழக்கம். அதனால் தாங்கள் எனக்கு நேரத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டாம். நான் எந்தப் பேச்சும் பேசவில்லை. எந்தத் தன்மையிலிருந்து இந்த வினா எழுகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். அது இல்லை என்று சொன்னால், வினா என்று சொல்லி, இரண்டே செய்தியில் முடித்துவிடலாம், அவர்களும் பதில் சொல்ல முடியாமல் போகும்.

அந்தக் கொடுமை அங்கே ஏற்பட்டதினாலேதான் மாணவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பிரதிநிதிகள் வேண்டும் என்று கேட்டார்கள். மற்றது, கல்லூரியில் முதல்வர் அவர்கள் தலைவராக இருப்பார். அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்றுதான் அவர்கள் கேட்டார்கள். இதை

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 20

மறுத்ததினால்தான் அந்த நிலைமை ஏற்பட்டது. ஆகவே அது தனியார் சொத்தாக இருந்தாலும், தனிச் சட்டங்களை அமலாக்க கூடிய முறையில் அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஏதாவது வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் தனியார் கல்லூரியில் அவ்வப்போது தோன்றுவது என்பது நடைமுறையிலே நாம் பார்த்து வருகின்ற ஒன்று. மாணவர்கள் நலக் குழு அமைக்கவேண்டும் என்று விரும்பி, அதற்காக வலியுறுத்திய போது, நலக்குழுவைக் கல்லூரியினுடைய முதல்வர் அவர்கள், தேர்ந்தெடுக்கின்ற நலக்குழுவாக இல்லாமல் நியமனம் செய்யப் படுகின்ற நலக்குழுவாக உருவாக்கினார்கள். அதிலே மாறுபாடு ஏற்பட்டது. காந்தியக் கொள்கை, அதனுடைய அடிப்படையிலே இந்தக் கல்லூரி நடைபெறும் என்று சொல்கிற முதல்வர் அவர்கள், அந்த அடிப்படையிலே இந்தக் கல்லூரியை நடத்துவதற்கு மாணவர்கள் ஒத்துழைக்காததன் காரணமாக, இந்தக் கல்லூரியை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று கூடத் தெரிவித்ததாகக் காணப்படுகிறது. உடனடியாக எடுப்பது என்பது அரசாங்கத் தினுடைய நிர்வாகத்திலே இயலாத ஒரு காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். இந்த நிலையில், பல்கலைக் கழகத் துணை வேந்தர் தலையிட்டு சமா தானம் செய்திருக்கிறார். அதற்கு மேலும் துணை இயக்குநர் உடனடியாகக் கல்லூரிக்குச் சென்று, நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்து, கல்லூரியை முழு அளவில் திறக்கவும், சுமூக சூழ்நிலையில் செயல்படவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு மேலதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளார். கோவை மண்டலத் துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநர், மாணவர் கள் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் முதல் போராட்டத்தை நிறுத்திவிட்டு, படிப்படியாகக் கல்லூரிக்கு வரத் துவங்கிவிட்டனர் என்று அண்மையிலே தெரிவித்திருக்கிறார்கள். எனவே கல்லூரி தொடர்ந்து நடைபெறுகிறபோது மேலும் குறை பாடுகள் ஏற்படாமல் கல்லூரி செயற்பட துணை இயக்குநர் மூல மாக ஆவன செய்வதற்கு அரசு முயற்சிக்கும்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக இரண்டாவது வினாவை மதிப்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளியங்கிரி அவர்கள் எழுப்புவார்கள்.

(முற்பகல் 9-20)

திரு. யூ. கே. வெள்ளியங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொங்கு நாடு கலைக் கல்லூரி சம்பந்தமாக அறிக்கை வைத்திருக்கிறார்கள். எங்களுடைய தலைவர் திரு. ரமணி அவர்கள் சுருக்கமாகச் சொன்னார்கள். அந்தக் கல்லூரியில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஆசிரியர்களும், மாணவர்களும் கொடுமைப்படுத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து நடத்த முடியாத ஒரு நிலை இருந்து வருகிறது. அரசே இந்தக் கல்லூரியை ஏற்று நடத்தவேண்டும் என்று மாணவர்களும் விரும்புகிறார்கள். அந்த முறையில் இதை உடனடியாக எடுக்க முடியாது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னாலும் கூட, எவ்வளவு விரைவாக இதை அரசாங்கமே எடுத்து நடத்தமுடியுமோ, அவ்வளவு விரைவாக எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல நன்கொடை என்ற பெயரால் . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விடுப்பது வேண்டுகோளா அல்லது தொடுப்பது வினாவா?

திரு. யூ. கே. வெள்ளியங்கிரி: தலைவர் அவர்களே, நடக்கிற விவரங்களைத்தான் இந்த அவையில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மரபுகளைப் பின்பற்றத் தவறினால் நான் வாய்ப்புக்களை மறுக்க நேரிடும். வினாவை மட்டும் தொடுங்கள்.

திரு. யூ. கே. வெள்ளியங்கிரி: ஆகவே இந்தக் கல்லூரியை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அந்த முறையிலே அதை எடுத்து நடத்த வேண்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவரவர்களே, கடந்த காலத்தில் இப்படிப் பல கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டது. அவற்றிலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூல

[பேராசிரியர் க. அன்பழகன்] 1989 பிப்ரவரி 20]

மாகத்தான் தற்போதுள்ள அரசாங்கத்தினுடைய நிதிநிலையில் வரவு-செலவுத் திட்ட அளவில் பல கடமைகளை நிறைவேற்ற முடியுமே தவிர, கல்லூரியை, அதுவும் மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல, ஓலைக் கொட்டகைகளாகப் போட்டு, இட வசதி இல்லாமல் இப்படி ஒரு கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலையில், அந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்டு, உடனடியாக அவை களுக்குத் தேவையான நிதிவசதிகளை வழங்கக்கூடிய நிலை அரசுக்கு இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். எனவே, நடைமுறையில் ஒழுங்குபடுத்துவதற்கு என் னென்ன செய்ய முடியுமோ, அவைகளைச் செய்வதற்கு இந்த அரசு தீவிரமான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருவாளர்கள் பெ. சு. திரு வேங்கடம், எஸ். பி. கண்ணன், கே. பிச்சாண்டி, வி. எம். தேவராஜ், அ. இராசேந்திரன், டி. பொன்முடி, கே. ஏ. செங்கோட்டையன், எஸ். டி. உகம்சந்த், துரை ராமசாமி, வே. நா. சுப்பிரமணியன். பி. மாரப்பன், வே. பெரியசாமி, வி. கே. சின்னசாமி, என். பழனி வேல், எஸ். ஏ. தங்கராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் குறிப்பாக வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் சென்ற ஒரு வார காலமாக மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விரிவான அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது :

TRUTH ALONE TRIUMPHS